உ

சித்தாந்த நிச்சயம்.

தருமபுர ஆதீனத்து ௯-வது மஹாசந்நிதானம்

திருநாவுக்கரசுதேசிகர் அருளியது.

R673
N28
68090

..., ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை,

பதிப்பாசிரியர்.

உ

சிவமயம்.

திருக் கயிலாய பரம்பரை ஸ்ரீ மெய்கண்ட சந்தான ஞான பீடமாகிய

திருத்தருமபுரவாதீனத்து கூ-வது குருமூர்த்திகளாகிய

திருநாவுக்கரசுதேசிக சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சித்தாந்த நிச்சயம்.

இஃது,

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனத்துப்

பரமாசாரிய சுவாமிகளாகிய

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி,

ஷை ஆதீனத்து மாதவமுனிவர்

வித்துவான் ஸ்ரீமத், சட்டைநாதத்தம்பிரான் சுவாமிகள்

பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்துதவ,

ஸ்ரீகாழி வித்துவான்

ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்களால்

சீகாழித் திரிபுரசுந்தரி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரதிகள் ருள.] 1928. [Copy Right.

R 673
N28

Printed at the
Thirupurasundari Press,
Shiyali.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்த நிச்சயம்.

முகவுரை.

துதி.

திருநா வரையர்பிரான் சேப்பியசித் தாந்த
மிருநா வலந்தன்னி லேன்றநெருநாவி
னேத்த வியலளிக்கு மேன்றுந் தருமைவளங்
காத்த சிவஞானக் கன்று.

பரமாசாரியர் வணக்கம்.

யாது மாதவம் புரிந்ததேன் மனனகம் யாதினு முதவாதேன்
போது போக்கிய பிறவியி னிடையிடைப் போதமர் புனற்சோலைத்
தாது வண்டுணத் தண்மது வருத்திடுந் தருமையிற் குழுவின்கண்
மாது பாகராஞ் சுப்பிர மணியர்தம் மலரடி நினைத்தற்கே.

(இச்செய்யுளில் மனனகம் நினைத்தற்கே என்ற விடத்து
ாவகம் வழுத்தற்கே எனவும், கைத்தலம் தொழுதற்கே எனவும்
ட்டஞ் செய்து திரிகரணங்கட்குங் கொள்க.)

மாதவர் கூட்டத்து வணக்கம்.

வேத வாகம முதல்வர் விண்ணவர் மண்ணவர் தலைவர்
நாத னுமமே நவில்வார் நாமுயப் பற்பக லேத்தும்
பாத தாமரை யுடையார் பைந்தமிழ்க் காமரம் பாடுங்
காத லார்தரு தருமைக் கண்ணுதல் மாதவர் தாமே.

வேறு.

ஆழி நேஞ்சமே வந்திவ ணினைதியா லாகமத் துறைவேந்தர்
வாழி மாதவர் தருமையின் மாதவர் தாண்மலர் வழுத்தின்வேவ்
வூழி வல்வினை யாவையும் வீட்டிடு முரவின ருறுதூயர்
கேழி லங்கிய மேனியர் ஞானியர் கிளர்தரு மவர்சீரே.

தற்பதத் தனிமுதற் பொருளாகிய பரசிவன் தனது தாதான்மிய
சத்தியோடு ஈரியல்பாகிச், சமலரை வாழ்வித்தற்கு இலய போக
அதிகாரங்கட் கேற்கச் சத்தன் உத்தியுக்தன் பிரவிருத்தன் என்ன
மும்முதலாகி, வேதாகம வாயிலான் அறம் முதலிய நான்கினையு
முணர்த்தி, ஆன்மாக்களுக்குப் பஞ்சாவத்தை விளைத்தும் பஞ்ச பாச
வுபாதி தனக்கிலனாகிப், பசுக்கள் கன்ம போகம் நுகர்ந்து மலபரிபாக
மெய்துதற் பொருட்டு ஆறத்துவாக்களையும் நித்தபரிக்கிரக சத்தியால்
விரித்து, முத்தொழில்களை யதிசூக்குமமாயும் சூக்குமமாயும் தூல
மாயும் நடாத்துதற்கு அத்துவாக்களினிடம் நிட்களம் நிட்களசகளம்
சகளம் என்னும் முக்கூற்றுச் சிவன்முதலிய எழுவகைத் திருமேனி
களையுங் கொண்டு, முற்றறிவு முதலிய எண்குண சொரூபனாய்
உணரப்பட்டுச் சோகம் பாவனையா லுள்ளத்தில் துவிதமற்று ஏகனாய்
மன்னிநிற்கவே, அவனது திருவருளா லடியேம் உண்மைச் சிவாநு
பவத்தை யுள்ளவா றுணர்ந்து உய்தற் பொருட்டுச் சைவசித்தாந்தப்
பெருநெறியை எடுத்துக் கூறும் நூல்கள் வடமொழியில் அட்டாதச
வித்தையும், தென்மொழியிற் றிருத்தேவாரமும் பிறவுமாம். இக்
கருத்துப்பற்றியே திருஞானசம்பந்தப்பிள்ளையார் இவ்விருமொழி
களையும் 'ஆகமத்தொடு மந்திரங்க ளமைத்த சங்கதம், வேதம்,
அங்கம், பதினெட்டு, சூதன் னொலிமாலை யென்றே கலிக்கோவை
சொல்லே, தமிழ்ச்சொலும் வடசொலும், ஊறுமின்றமிழ்' எனப்
பலவிடத்தும் பலபடப் புகழ்ந்து பாராட்டினர். இவ்விருமொழியி
லும் சித்தாந்த முத்திநிலையைக் கூறும் வாக்கியங்களே பிரபலசுருதி
வாக்கியங்களாம். அம்முத்திநிலையாவது 'ஓதிய முத்தி யடைவே
யுயிர்பர, பேதமி லச்சிவ மெய்துந் துரியமோ, டாதி சொரூபஞ்
சொரூபத்த தாகவே, யேதமி லாநிரு வாணம் பிறந்ததே' என்று
திருமந்திர மாலையிற் கூறிய பரிநிர்வாணமேயாம். இந்நிலையைப்
பெற்றுற்றவர் பிதற்றொழிந்தார்: வைதிக சுத்தாத்துவித சைவத்
தின் மாறுபட்டன வற்றையும் சிவாநுபவத்திற்கு விரோதப் பட்டன
வற்றையும் பேசுதல் ஒழிந்தார். ஆதலின் அன்னாரைக் கற்றற்றவ
சுற்றற்றவர் என்று திவ்விய சூக்திகள் கூறும். இத்தகைய முத்தி
நிலையையும் சிவாநந்தத்தையும் மலைவுதீர்த்துக் கூறும் இந்நூல் ஸ்ரீ
தருபுரமவாதீனத்து ௯-வது குருமூர்த்திகளாய் எழுந்தருளிய திரு
நாவுக்கரசு தேசிகர் தமது ஞானாசாரியராகிய அழகிய திருச்சிற்றம்
பல தேசிகரது அநுக்கிரகத்தின்படி அருளிச் செய்தது இச்சித்
தாந்த நிச்சயப் பிரதிகளுட் பாடபேதங்கள் பலவாயிருப்பினும் அவ்
வாதீனத்து முனிவர் வித்துவான் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள்
பரிசோதித்துத் தந்த பிரதிபாடமே இங்கு அச்சிடுவிக்கப் பெற்றது.
11—14, 57—62, 79—82, 97, 98 எண்ணுள்ள செய்யுள்கள் சில
பிரதியில் சிதைத்து வரையப்பட்டிருந்தன. நக்ஷத்திரக் குறியிட்ட

த்துறை யிரண்டும் ஒரு பிரதியின் மாத்திரம் காணப்பட்டன.
இந்நூல் ஏகான்மவாதிகள் கூறும் நிர் உபசரித ஐக்கியத்தையும்,
அகச்சமயிகளுட் சிலர் கூறும் சிவசமவாதத்தையும் ஈசுவர அவிகார
வாதத்தையும் பரிணாமவாதத்தையும் சிவாத்துவிதத்தையும் மறுத்து
“உற்ற சரியை யொழியாத நற்கிரியை, குற்றமிலா யோகக் குறி
நெறியு--முற்றிப், பிறந்தார் பதிபசுபா சந்தெரிந்து” சிவனடி சேர்
தல் என்னும்உபசரித சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பரஞானத்தை
உணரப் போதித்தலின் அஃதாவது சைவாகமங்களின் பொருள்
நிச்சயத்தை யுணர்த்தலின் சித்தாந்த நிச்சயம் எனப் பெயர்பெற்றது
இந்நூலை யுற்று நோக்குவார்க்கு இவ்வுண்மை தானே புலனாகும்.

இந்நூலை யருளிச்செய்த பெரியார் வேத சிவாகமங்களின்
வழியே சுத்தாத்விதநிலையைப் பொருந்துமாற்றான் நியாயவாயிலாகச்
சத்தியசோதி வாகீசமுனிவர் முதலிய ஞானப்பெருஞ் செல்வரது
கருத்துக்களைத் தழுவி, ஆணவமலத்தின் இருவகையியல்பையும்,
அஃது உயிரைப் பந்தித்திருக்கும் கேவலநிலையையும், கலாதிகள்
வேறுபடுத்த சகலநிலையையும், அதன் வலி சிவசத்தியாற் கெட்டு
நிற்குஞ் சுத்தநிலையையும் ஏதுக்களானும் திருட்டாந்தங்களானும்
காட்டி, ஆணவமானது உள்பொருள் அன்று திரவியம் அன்று என்
பாரையும், மாயாகாரியமாகிய அவைராக்கியமான இராகமே யான்ம
ஞானாவரக மென்பாரையும், மாயையே தநுபுவன காரணமாய்
வேறுநின்று ஆன்மாவின் இச்சை ஞானக் கிரியைகளை மறைக்கு
மென்பாரையும், ஆன்மாவின் இயற்கையும் குணமாகிய அஞ்ஞான
மே ஞானத்தைத் தடுக்கு மென்பாரையும் மறுத்து, ஆணவமலத்
தின் மோகமுதலிய குணங்களையும், அவை ஆன்மாவை யிடர்ப்படுத்
தும் ஆற்றையும், பூதவிருள்போ லன்றி யம்மலம் தன்னையும் தன்
னுட் செறித்து அணுத்தன்மைப்படுத்த உயிரையும் காட்டாத தன்
மையும், அம்மலத்தைத் தரிசிக்கும் வழியையும், அம்மலம்
இல்லையெனிற் படுமிழுக்கையும் விவரித்து, இம்முகத்தானே குறிப்
பாக ஆணவமலத்தின் உருவமாதியவற்றை யியம்பி, அதன்பின்
ஆணவமலமானது பதிஞானத்தின்மேற் படராமலும், சிற்சத்திக்குக்
காரியத்திற் பிரவிருத்திவாராமலும் விடயசிற்சத்தி காரியமாகிய
இச்சாஞானக்கிரியைகளையே தடுக்குமெனவும், பராசத்தியோகத்
தாலும் கலாதி யோகத்தாலும் ஆன்மாவிற்கு இன்ன பயன்உண்டாகு
மெனவும், பரமசிவனுடைய பரங்கருணையாகிய சிற்சத்தி யொன்
றானே ஆணவமலத்தின் வீக்கம் நீங்குமெனவும், இந்நீக்கத்திற்
சிவப்பேறு எய்தலே முதல்வனும் உயிரின்கண் கலந்தவழிஆனந்த
சொரூபமாய் நிற்பதுவே வேதாகம சம்மதமாகவிளங்குஞ்சுத்தாத்து
வித சித்தாந்த வைதிக சைவ முத்தியாமெனவும் நிலைநாட்டிச்
சித்தாந்த நிச்சயஞ் செய்தருளுகின்றார்.

திருமடாலயத்துப் பிரதியோடு ஒத்துப்பார்த்துக் கொள்ளும்படி என் வேண்டுகோளுக் கிணங்கித் தங்களது பிரதியை யுபகரித்த சீகாழி நகர நிவாசரும் சம்ஸ்கிருத திராவிட ஆங்கிலாதி பாஷா கலாவல்லவரும் உயர்திருவாளரும் ஆகிய ச. சதாசிவமுதலியாரவர் களுக்குத் தமியேன் மனப்பூர்வகமாகிய அன்பார்ந்த அதிவிநய வந் தனத்தைப் பன்முறையுஞ் செலுத்துகின்றேன்.

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனத்துப் பரமாசாரிய சுவாமிகளாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக குருமூர்த்தி சுவாமி கள் சிஷ்டாசார சீல நியமசற்குரு நிலையினர்க்கும் தங்கள் சந்நிதி முற்பட்ட மற்றை எத்திற நிலையினர்க்கும் மனவாக்குக் கெட்டுதற் கரிய சிவாநுபவாதீத நிலையை அருளும் விசேஷம் பற்றி யாதொன் றுக்கும் பற்றாத என்னையும் பக்குவப் படுத்தி யாட்கொண்டு, இத் தகைய உயர்தரநூல்களை அடியேன் அச்சிடுவிக்கும் ஆற்றலையும் விடாமுயற்சியையும் அநுக்கிரகித்து, அச்சிடுவிக்கும் செலவு தொகை முழுதையும் தாங்களே தங்கள் பொறுப்பில் உபகரித்துத் தமியேற் குத் தக்க உயர்தரச் சன்மானங்கள் அளித்து ஆதரித்து வருதலின், அப்பரம கருணாகர மூர்த்திகள் செய்ந்நன்றியை யான் என்றும் மறவாது போற்றி வருகின்றேன்.

இந்திரை கேள்வ னிபைந்தன்பி னிட்டமலர்
வந்த மணமுவக்கும் வண்டேனுளம்—விந்துவின்
மானந்தத் தேநடஞ்சேய் மாதவன் ருட்சலச
மானந்தத் தேனல்கு மாங்கு.

ஸ்ரீகாழி விபவஹு வ்ருஷபரவி உசவ	ப. அ. முத்துத்தாண்டவராயன்.

உ

குருபாதம்.

சித்தாந்த நிச்சயம்.

திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் அருளியது.

காப்பு.

சித்தாந்தம் யாதென்று சிந்திப் பவர்தமக்குச்
சித்தாந்த நிச்சயத்தைச் செப்பவே—முத்தனு
மைம்முகத்தான் றந்த வருட்கதிரோன் போல்விளங்குங்
கைம்முகத்தா னேமிகவுங் காப்பு.

நூல்.

நல்லார்கள் போற்றிய மெய்கண்ட நாதன் நயந்தளித்த
சொல்லா கமப்பொரு டன்னைவிட் டன்னியஞ் சொல்லுமிந்தக்
கல்லார் மருட்சொற் கழித்துச்சித் தாந்தக் கருத்திதெனப்
பொல்லாத பிள்ளை யிணையடி போற்றிப் புகலுதுமே. (க)

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடோர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே. (உ)

சுத்தியைக் கண்டிது வெள்ளியென் றூர்க்கிது சுத்தியென்று
சுத்தியின் றன்மை யறியும் பரீட்சை தொகுப்பவர்போன்
முத்தி சிவனுக் கிணையன் றவனின்பின் மூழ்குவதே
முத்தி யுயிர்க்கென்றி யானும் பரீட்சை மொழிகுவனே. (ங)

ஆகம வேத புராணாதி யாய்ந்த வருளுடையோ
ரேகன தானந்த மேமுத்தி யென்ன விசைத்ததனை
யூக மிலாது சிவசம முத்தியென் றோதினர்க்குப்
போக மலாது பரமுத்தி தானும் பொருந்தலின்றே. (ச)

ஒருமை தருஞ்சிவ ஞானந்த முத்திய தொன்றொழியப்
பெருமைசெய் முத்தி பிரானுக் கிணையென்னும் பித்தர்சொன்னீத்
தருமை யுடையசித் தாந்தமீ தென்ன வருளுருவாந்
திருமையி னாவுக் கரசசம் பந்தனுஞ் சாற்றினனே. (ரு)

*ஒருமைய தாகுஞ் சிவானந்த முத்தி யினையொழியப்
பெருமைசெய் முத்தி பிரானுக் கிணையெனப் பேசுவது
பருமை யொழியுமின் சித்தாந்த மீதெனப் பாரில்வந்து
தருமை யழகிய சிற்றம் பலகுரு சாற்றினனே. (ருA)

ஆணவந் தன்னை யபிபவஞ் செய்திங் கரனருடான்
பேணிய முத்தர்க் கலாதவெதந் நாளும் பெருந்துணையாய்த்
தாணுவி னானந்தந் தன்னையு மீவது சாற்றுமறை
பூணு மரனருள் பெற்றவர் தாமும் புகன்றனரே. (சு)

கண்ணிற் படல முடையார் வயித்தியன் காட்டும்வழி
யண்ணி நடப்பர் நடவார் படல வவலமற்றோர்
நண்ணு முயிரும் மலத்தா ரென்றுணை நச்சியிடு
மெண்ணு மலந்தவிர்ந் தாலிறை வன்றுணை யின்றெனிலே. (எ)

படல வுவமையைப் பன்னிய தீங்ஙனப் பண்டிதன்றான்
படலம தோடப் படிமிசைத் தன்றொழில் பண்ணினதிற்
படல வயித்தியன் றன்றுணை தன்னையும் பன்னினதேற்
படலம தொப்ப வுருவாய் மலத்தையும் பாறுமென்னே. (அ)

உன்னும் பிருதுவி தான்முத லாய வுலகதனின்
மன்னும் பொருட்பெய ராதி யறிவின் மதியிலியோர்
சொன்ன பொருட்பெய ராதி துணிந்திடச் சொல்குருவாற்
பன்னிய சத்த மதனாலெஞ் ஞானங்கள் பாற்றினரே. (கூ)

மன்னுமஞ் ஞானமு மாறிப்பின் றாமு மதியுளராய்ச்
சொன்ன குருவின்றித் தாமே பொருளைத் துணிந்ததுபோன்
முன்னவன் றன்னரு ளான்மல நீங்கிய முத்தர்களு
மன்ன சிவனின்றித் தாமறி வாரென் றறைந்திடலே. (ω)

நாதன் பரம்பர னம்பன் பரசிவ னாரிபங்கன்
பூதம் பலபுடை சூழப் புயங்கப் புனிதநடம்
பாதம் பனவர் பரவப் புரிபவன் பண்டறிஞர்க்
கோது மறைப்பொரு டேறார் கருத்தில ரூமர்களே. (ωக)

சுருதி குருபரன் மெய்சே ரநுபவஞ் சொல்லுமுறைக்
கருதி யுளவணங் கூறுங் கருத்தனைக் காண்கிலராய்
மிருதி தருமமும் வேத்தி நிலையும் விரும்பிலராய்ப்
பருதி யெனத்தமைப் பாவிப்பர் ஞானம் பருகுவரே. (௰௨.)

அளவைப் பொருளு மளத்தற் கருவியு மான்றநிலை
யுளவைக் கருது மொழுக்கமுஞ் சீலமு முள்ளவராய்க்
களவைக் கடிந்து கருணைக் குருபரன் காற்கமலத்
துளவப் பருணித ருண்மைச் சிவஞான மோங்குறுமே. (௰௩)

மறைதந்த வம்மான் மறைப்பைத் தவிர்க்கவம் மாமறையி
னுறைதந்த சத்தியை யுள்ளொளி யாக்கி யுயரொளியிற்
கறைதந்த பாசங் கழற்றிக் கருணைக் கடலமுதா
மறைதந்த ஞானஞ் சிவஞான மென்ப ரறிஞர்களே. (௰௪)

சத்திக்கு நாச மலத்துக்கு நாசந் தனிமுதலா
மத்தன் வசன விரோதமு மின்றெனி லன்றுரைத்த
சத்திக்கு நாசந் தரவே மலத்துக்குஞ் சாருமையோ
வத்தரு மஞ்சீர் சிதைந்தாற் றருமியு மற்றிடுமே. (௰௫)

குணத்தின் வடிவம தாகி யிருந்த குணியதற்குக்
குணத்தை யகன்ற விடத்திங் குருவத்தைக் கூறுகநீ
குணத்தின் வடிவை விடுத்துக் குணியைக் குறிப்பரிதாற்
குணத்தை விடுத்துக் குணியிங் கிருப்பது கூறரிதே. (௰௬)

கண்ட கடத்தின் றருமங் கறுப்புக் கழிந்திடவு
மண்டி யருண மதற்குக் குணமென வந்திடவும்
விண்டக லாமற் கடமிங் கிருக்கவு மேதினியிற்
கொண்ட படிமல சக்திக்கு நாசமுங் கொண்டிடலே. (௰௭)

பன்னு கடத்தின் கறுப்பைத் துணிக்கப் பகையதுவாய்
மன்னிச் சிவப்பொன்று வந்தது போல மலமதற்குந்
துன்னிய வாவா ரகசத்தி தன்னைத் துணித்திடவே
யன்னிய சத்தி பிரகாச மாய்வந் தணையுமென்னே. (௰அ)

அன்றியு மந்த மலசத்தி தன்னை யகற்றுவது
துன்றி யிடுஞ்சிவ சத்தி யெனுஞ்சொற் றொலைந்துவிடு
முன்றன் மொழிப்படி யாகமந் தானு முரைத்திடுமோ
வென்றும் விசாரித் துரையா யியம்புவ மின்னமுமே. (௰௯)

சைவத்தி லெல்லாப் பொருளு மனுதித் தகைமையென்று
மெய்வைத்த வாகமஞ் சற்காரி யத்தை விளம்புவதும்
பொய்வைத்த சொல்லாய்ப் பொருந்துங் கடதன்மம்பொன்றுமெனின்
மொய்வைத்த குற்றங் களின்னு மனேக மொழிகுவமே. (உ௰)

அந்த மலசத்தி தன்னை யசத்தென் றறைகுதியோ
நந்த லொழிந்திடுஞ் சத்தென்று நாளு நவிலுவையோ
தந்த வசத்தெனிற் சத்தி சசக்கொம்பு தன்னைநிகர்த்
திந்த வுயிர்ச்சத்தி தன்னை மறைப்பது மில்லையன்றே. (உக)

ஒன்றிடுஞ் சத்தென் றுரைக்கின் மலசத்தி யுண்மையின்று
பொன்றிடு மென்றதெ னித்திய மாமுயிர் போலவிவண்
அன்றியு மோட்சநற் காரிகை தன்னி லறைந்ததுவு
நன்றல வென்று மொழிவோ நயந்தெமை நண்ணிடிலே. (உஉ)

வெஞ்சக மாகுஞ் சிவசத்தி சன்னிதி வேண்டிநித்த
மெஞ்சலி லாவுயி ரெப்போது மேவி யிருக்கவென்றே
துஞ்சலி லாவுயிர் வேத்தியு முண்டென்று சொல்லியது
வஞ்சக வாணவந் தான்கெடு மென்றவர் மாற்றமன்றே. (உங)

வஞ்ச மலங்கெடு மாகையி னுன்மலம் வந்துபின்னு
மெஞ்ச லிலாத வுயிர்க்குத் தொடருவ தில்லையென்றே
விஞ்சைநல் லாகமந் தானும் விளம்பிட வேண்டுமிதற்
கஞ்சி மலத்துக் கழிவின் றபிபவ மாமெனிலே. (உச)

ஆதவன் றன்கிர ணத்தா லிருளை யபிபவித்தே
கோதறு நேத்திரந் தானறி யும்பொருள் கூர்ந்தறிய
நீதிய தாகித் துணையா யிருந்த நிலைமையைப்போற்
சோதியு முத்தியி லான்மா வுணரத் துணையெனுமே. (உரு)

ஆணவம் பாக மடைதற் பொருட்டிங் கரனருடான்
பூணுங் கலாதிக ளாலே மலத்தினைப் போக்கியபின்
பேணிச் சுகாதி யளிக்கின்ற பெற்றியிற் பெத்தத்திலே
தாணுச் சகாயந் தவிராது வேண்டுதல் சத்தியமே. (உசு)

ஆணவம் பாக மடைந்த வதற்பி னரனருடான்
பூணு மலத்தை யபிபவ மெங்கும் பொருந்திடவே
பேணி யருளிய பின்னு முயிர்க்கப் பிரான்றினமும்
பூணுந் தொழிலின் றதனு லரன்றுணை போமெனிலே. (உஎ)

கடத்தை வனையுங் குயவன் வனைந்த கடநிமித்த
நடத்துந் தொழிலின் றதுபோ லபிபவ நண்ணிடுமோ
மடக்கினிற் றீப மிருந்த விடத்துமுன் மன்னுமிருள்
அடர்த்த வகையை விசாரித்து நீமற் றறைகுதியே. (௨௮)

அந்தகன் னேத்திரந் தன்னை யடக்கின வாரிருளின்
பந்த மதனை யடக்கவென் றெண்ணிப் பரிந்துகொண்டு
வந்த விளக்கொரு காலிரு டன்னை மறித்ததற்பின்
றந்த தொழில்விட் டிருந்ததென் றேமிகச் சாற்றிடிலே. (௨௯)

பன்னும் விளக்கிற் பயனில்லை யாகும் பகர்விளக்கும்
மன்னிய தேச மடையப்பின் னவ்விரு ளானதுதான்
றுன்னுவ தென்கொலச் சொல்விடு காரியத் தோற்றமின்று
மன்னிய மேற்சொல்திட் டாந்த மதற்கும் வழக்கிதுவே. (௩௰)

அந்த விரோதத் திருளை யபிபவ மாகச்செய்ய
வந்த விளக்குக்கு மாறாத் தொழிலை மதித்துரையா
யிந்தநல் லாணவந் தானே யநாதி யெனுஞ்செயுடான்
றந்த பொருளையுந் தானறிந் தாயிலை சாலநன்றே. (௩௧)

அக்கினி வெம்மை யடக்கு மவுடத்த தாம்பலத்தைத்
தக்க மிலாம லபிபவஞ் செய்த தனிமணிதான்
மிக்கக லாம விருந்த வளவு மிகுநெருப்புத்
தொக்குநர் தம்மைச் சுடுமணி போகிற் சுடுவதின்றே. (௩௨)

சொன்ன மருந்தின் பலத்தை யடக்குஞ் சுடர்மணிக்கு
மன்னிய வக்கினி வெம்மை யடக்கு மருந்துக்குந்தான்
துன்னி யபிபவஞ் செய்தொழி லென்றுந் தொடர்ச்சியென்ப
துன்னி யுரைசெய் யுரைப்போ மிதன்றியு மோர்ந்துகொள்ளே. (௩௩)

மன்னுங் கலைமுத லாகுங் கரணங்கள் வந்ததனுன்
மின்னி யிருந்த வளவு மறிவும் விளங்கியிடு
மன்ன கலைமுத லாயின நீங்கி னறிவிலதாற்
சொன்ன கலாதிக் கபிபவ மென்னுந் தொழினித்தமே. (௩௪)

சென்றிவ் வுயிரின் குணத்தை யபிபவஞ் செய்தமல
மன்றொரு காலத் தபிபவஞ் செய்திங் ககன்றதுவோ
வின்றள வுஞ்சொல் லபிபவஞ் செய்திங் கிருக்கின்றதோ
வொன்றை விசாரித் துரையாய் விடையை யுவந்திடவே. (௩௫)

அன்றொரு காலத் தபிபவஞ் செய்திங் ககன்றதெனி
லின்றிமை யாலம் மலத்துக் கபிபவ மென்கொலையோ
சென்றொரு சாத்தனைக் கொற்றன் புடைத்தவன் சேர்ந்தபின்னே
யொன்றிய சாத்தனை யேன்புடைத் தாயென் றுரைநவின்றே. (௩௬)

ஒன்றுநற் சாத்தற் குரியவர் வந்திங் குயர்கொற்றனைப்
பொன்றுவ செய்கோற் கொடுபுடைத் தாலது பூவுலகி
னன்றயர் சாத்தன் பிழைத்தற்கு நன்மருந் தாயிடுமோ
வின்றுநின் வாக்கில் வசன விரோதமு மெய்தியதே. (௩௭)

இன்றள வும்நல் லுயிர்க்கு ளறிவை யிருண்மலமுந்
துன்றி யபிபவஞ் செய்திருக் கும்மெனச் சொல்லிடினீ
பொன்றுத லற்ற புகழ்முத்தி யின்கண் புகல்சிவனு
மென்று மலத்துக் கபிபவஞ் செய்வ னெனவியம்பே. (௩௮)

உரைத்த விசேடத் தபிபவஞ் செய்கின்ற வொண்பொருட்கு
வரைத்தியம் பாத்தொழி லுண்டென் றுரைத்து மலமறைப்பா
நிரைத்த தொழிலை யபிபவஞ் செய்கின்ற நின்மலர்க்கும்
புரைத்த தொழிலென்று நீங்காத தென்னப் புகழ்ந்துரையே. (௩௯)

அன்றியுஞ் சத்தியச் சோதி யெனுநல் லருட்குருவு
மின்னுயிர் தங்கட் கனுக்கிர கத்தா வியம்பினதா
யொன்றருள் செய்மோட்ச காரிகை தன்னி லுரைத்திருக்கு
நன்றுரை தன்னை யறிந்திலை நாமு நவிலுதுமே. (௪௰)

சாருஞ் சிவசத்தி யான்மாவின் வேத்தி தருவதென
வாரும் புகழ்சைவ சித்தாந்தஞ் செப்ப வதுதெரியா
தோரும் பரமத வாதியும் வெஞ்சக முள்ளளவே
சீருறு வெங்கியந் தானும் விளங்குஞ் சிறந்தென்றுமே. (௪௧)

வெஞ்சகம் போனபின் வெங்கியந் தானும் விளங்கலின்றாம்
வஞ்சமின் முத்தர்க்கு மிவ்வண்ணம் வந்து மலமறைக்கு
மெஞ்சலி லாமுத்தி சொல்லுவ தென்கொ லெனச்சொல்லவே
துஞ்சலில் சத்தியச் சோதிசொல் வாக்கியஞ் சொல்லுதுமே. (௪௨)

வெஞ்சக மாகுஞ் சிவசத்தி சன்னிதி மேவியென்றுந்
தஞ்சம தாயுயிர் நீங்காது கூடித் தரிக்கையினால்
துஞ்சலி லாவுயிர் வேத்தியு முண்டென்று சொன்னதுவுஞ்
செஞ்சொலி னாற்சைவர் செப்பிய தின்றே தெரிந்துனக்கே. (௪௩)

மலபரி பாகம்வந் தாற்சிவ சத்தி மலமதனை
விலக வபிபவஞ் செய்தபின் சீவன் விசுத்தமுற்றே
யிலகிய தன்சத்தி யாலு மலத்தினை யேற்றிடுமால்
நிலவுஞ் சிவசத்தி யென்றனை யென்று நிகழ்த்திடிலே. (௪௪)

ஈசனும் புற்கலன் றானு மிசைந்திங் கிருண்மலத்தை
நாசம தாக வபிபவஞ் செய்வ ரெனநவின்றாய்
பேசிய முத்தியி லீசன் றுணையைப் பிரிப்பதென்னே
பாச மகல வரனு மபிபவம் பண்ணினனே. (௪௫)

அந்தச் சிவசத்தி தன்னு லபிபவ மானமல
மிந்த வுயிர்ச்சத்தி யாலு மபிபவ மென்கொலையோ
முந்தைச் சிவசத்தி யாலே மலசத்தி மோசித்தபின்
றந்த வுயிர்ச்சத்தி யாது புரிந்தது சாற்றுகவே. (௪௬)

ஆணவ சத்தியை யெல்லா மகற்றுழி யாங்கதிலே
தாணுவின் சத்தியிற் றீராத சத்தியுஞ் சற்றுளதோ
காணு முயிர்மற் றதனை யபிபவங் கண்டதுவோ
வீணின் மலசத்தி யெல்லா மகற்றிப்பின் வீட்டிடவே. (௪௭)

ஆணவஞ் சேரி லுயிர்க்குள்ள சத்தி யகற்றியதோ
பூணுஞ் சிவசத்தி யாலொழி யாததைப் போக்குமெனிற்
பேணும் பிரானிற் பெரிதா முயிர்ச்சத்தி பிஞ்ஞகனாற்
காணுஞ் சருவ கிருத்திய மென்பதுங் கண்டிலமே. (௪௮)

சிந்த மலசத்தி யெல்லா மரன்முனந் தீர்த்தகல
வந்த மலசத்தி தன்னை யுயிர்ச்சத்தி மாய்த்ததெனிற்
பந்த மிலாப்பரன் பாசத்தைத் தள்ளிப் பரையதனு
லந்தமி லானந்த நல்குவ னென்பதை யாய்ந்திலையே. (௪௯)

அன்றரன் பாச மகற்றி விடுத்தபின் னுருயிருந்
துன்று மலந்தனைப் போக்கிடு மென்றுரை செய்ததென்னே
வொன்று மலபரி பாக மடைந்தபி னேங்குயிர்தான்
வென்று மலத்தை யடக்குமென் றலென் விளம்புகவே. (௫௰)

செம்பிற் களிம்பை யிரத குளிகை சிதைத்ததுபோல்
நம்பரன் சத்தி மலத்துக்கு நாசத்தை நல்குமென்ற
வும்பர்கள் போற்றும் வசன விரோதமுண் டாமதனல்
இம்பரி லிவ்வணம் யாங்க ளிசைத்தன மென்றிடிலே. (௫௧)

செம்பிற் களிம்பை யிரத குளிகைமுன் தீர்த்தகலப்
பம்பும் களிம்பு திரும்பிப் பொருந்தும் பரிசுதன்னை
மொய்ம்புறு செம்புதன் சத்தியிற் றீர்த்தன் மொழியவரும்
வம்பிது காணிப் படியாக மத்தில் வசனமின்றே. (௫௨)

மலத்தை யிருளென்றுங் காளித மென்று மதித்தரனைத்
துலக்கும் பரிதி குளிகையென் றாகமஞ் சொன்னதுபோல்
கலக்க வுயிர்க்கித் திறமாக மத்திற் கழறலின்றால்
அலைக்கு மறிவுள வான்மா மலத்தை யகற்றலின்றே. (௫௩)

விளக்கொன்று வந்திரு ணீக்கிப் பொருளை விளக்கியபின்
விளக்கொன்று வந்தத னோடு பொருளை விளக்குதல்போற்
றுளக்கொன் றிலாது மலந்தீர்த் தருளிய சோதியுடன்
றுளக்கொன் றிலாமுத்த ருந்தீர்ப்ப ராணவத் துன்பத்தையே. (௫௪)

இவ்வா றிசைத்திடின் முன்சொன்ன குற்றமு மின்றிறைவன்
செவ்வான சத்தி சகாயமுந் தீர்ந்த தெனச்செப்பினீ
யெவ்வாறு பின்வந்த தீபமுங் காரண மென்றிசைத்தா
யொவ்வாது நீசொல்லும் வார்த்தை தவறென் றுரைக்குவமே. (௫௫)

விளக்கை மறைத்த விருளையு நீக்கும் விளக்குமுண்டோ
விளக்கினைப் போலுயிர் தன்னையுஞ் சாற்றல் விதியலகாண்
விளக்கினைப் போலச் சிவனை யுரைப்பது வேவிதியாம்
விளக்கினுக் கின்னம் விளம்புதுங் குற்ற மிகவறியே. (௫௬)

விளக்கினின் மாய்ந்த விரியிருள் யாது விளம்புறுங்காற்
களக்கத்து மாயையின் காரிய ராகமுங் காரெனக்காண்
டுளக்கத்து மாயையு மான்ம குணமதுஞ் சூததுற்ற
விளக்கமி லஞ்ஞான பேதமு மல்ல விரித்திடினே. (௫௭)

ஆணவ மொன்றே யராகத்துப் போந்திங் கனந்தவித
ஆணவ மோக மதமாதி செய்வித் தறிவடக்கி
ஆணவந் தன்னைக்கண் காட்டா தடங்கி யனைத்துயிர்க்கும்
ஆணவ மொன்றே யநாதி யிருளென லாயிடுமே. (௫௮)

அவ்விருள் சீக்க வநாதி யமல னருள்கருணை
செவ்விது தேர்ந்திடச் சித்தாந்த முத்தித் திறனறிவ
ரவ்விய நெஞ்ச ரஃறயும் பலநெறி யாரகிலா
வெவ்விய தீவணன் பஞ்ச கிருத்தியம் வேண்டுவனே. (௫௯)

ஐம்மல நீக்குவ னைந்தொழில் வேண்டுவ னுண்டகைதா
னெம்மல நீக்க வருள்புரி யானெனி னுவதிலை
யைம்மல நீக்கத் தருந்தொழில் செய்யு மமலனட
மெம்மல நீக்குமா னந்த நடமென்ப ரான்றவரே. (௬௦)

படைப்பதுங் காப்பதும் பாரித் தவனி பரிசரித்துத்
துடைப்பதும் வேண்டுவன் றாயவன் றாய்மைச் சுகந்தருவா
னடைப்பது மத்தே மறைப்பது மானபின் னவ்வருள
லுடைப்பொருள் செய்யு மொருதொழி லாவ துணர்ந்துகொளே (௬௧)

விளக்கும் பரன்றொழி லைந்தொழி லென்றே விளம்புமறை
விளக்கு மவனென வாகமங் கூறும் விளக்குறவே
விளக்கு மொளியும் விரும்பு மரனென மேற்கருதி
விளக்கு முறையினிற் செய்வர்விண் ணப்பம் வினையறவே. (௬௨)

அன்றி யரன்செய்வ னைந்தொழில் தன்னையென் றுய்ந்துயிர்தான்
என்றுந் தொழில்செய்வ தின்றென் றியம்பி யிருண்மலத்தைப்
பொன்ற வபிபவஞ் செய்யுமென் றெண்ணிப் புகன்றதென்னே
நன்றுன் மொழியு மறந்தாய் மயங்கினை நன்றிதன்றே. (௬௩)

உன்னிய வாகம மண்ணலைப் போல வுரைத்தலினுற்
றன்னியல் பான்மலந் தீர்க்கின்ற யோக்கியந் தானுயிர்க்கு
மன்னிய தின்றுன் மதிமயக் காமதை மாற்றுகநீ
யன்னியஞ் சொல்லும் வகையுமின் றுலிங் கறைகுவமே. (௬௪)

மன்னிய பாசந் தவிர்த்த லபிபவ மாச்சொல்வர்காண்
முன்னவன் சத்தி மலபரி பாக முதிர்ந்தவர்க்கே
பின்னம தாக வபிபவஞ் செய்கின்ற பெற்றிமையிற்
சின்மயன் சத்தி சகாயநன் முத்தியிற் செப்பினமே. (௬௫)

ஆதவன் நற்கிர ணத்தா லிருளை யடர்த்திலனேல்
சோதிநன் னேத்திரந் தானும் பொருளைத் துணிந்தறியா
நீதியி லிவ்வண்ணம் யாமிங் கிசைத்தன நித்தியனும்
வேதியன் றன்றுணை நித்தமும் முத்தியில் வேண்டுமென்றே. (௬௬)

சொன்ன வசனங்க ளாலிங் கிறைவன் றுணையதனை
மன்னுநன் முத்தர்க்கு மாமென்று நாமும் மதித்தனங்கா
ணன்னதொன் றன்றி யிறைதன தானந்த மாகுமென்றிங்
குன்னி யுரைத்தது நன்றல நீரு முணர்ந்திடுமே. (௬௭)

பாச நிவர்த்தி யதுவே சுகமன்றிப் பாசமற்றோர்க்
கீசன தானந்த முற்றுற் சுகமென்ப தின்றென்பையேற்
பேசிய துக்க நிவர்த்தியோ டின்பம் பெறுவதுவே
காசினி யோரும் புருடார்த்த மாகக் கருதுவரே. (௬௮)

அன்றியும் பாச மகலச் சிவத்துவ மாகுதலே
நன்றுசெய் முத்தி யெனநூல் மொழிந்தது நாடிலையோ
யென்றுஞ் சிவத்துவந் தன்னைநல் லோர்க ளினிதுரைப்பார்
சென்றடை யாத சிவானந்த மென்று தெளிந்துகொள்ளே. (௬௯)

நாத முதற்சொற் பிரபஞ்சந் தன்னை நயந்தறிதல்
ஓதுஞ் சிவத்துவ மாமுல காதி யுணர்வதனல்
தீதில் சுகமுண்டு முன்சொன்ன குற்றமுந் தீருமெனில்
ஏத முறுபிர பஞ்சத் தறிவின் றிறுமின்பமே. (எ௦)

மன்னவ னாலும் வியாதியி னாலும் மறம்புரியத்
துன்னு மனிதர் மிருகாதி யாலுந் தொகுநிரயத்
தின்னவி னாலு மிளைக்கு முயிர்கண் டிரங்குமுத்தர்க்
குன்னிய துன்பம்விட் டின்பமெக் காலு முறுவதின்றே. (எ௧)

ஒழியாத துன்பத் துழல்பிர பஞ்சங்கண் டுள்ளுருகப்
பழியாந் தொழிலெமக் காகா தெனப்பரன் பாலுனைத்திங்
கெழுகோடி மந்திரத் திற்படி பாதியு மீசன்பொற்றாள்
வழுவாது பெற்றது சொல்லாக மத்தை மறந்தனையே. (எ௨)

உன்னுஞ் சிவத்துவ முத்தர்க் குவகை யுணர்த்தலென்று
சொன்னது வென்னரனைப்போலு மின்ப சொரூபமுண்டோ
சின்மயற் கின்புரு வத்தாற் சிவனென்று செப்புமறை
மன்னுயிர்க் கின்புரு வின்றப் பெயரான் வழங்கலின்றே. (எ௩)

அன்றிநற் கன்மமுற் றூர்பிர பஞ்சத் தனுபவத்திற்
றுன்றுவர் நாளுஞ் சுகத்திலென் றாகமஞ் சொல்லுதலா
லின்றுநின் முத்தரைப் பெத்தரென் றேசொ லிருவினைதீர்ந்
தொன்றுதன் முத்தியென் றாகமஞ் சொற்றது முற்றிலையே. (எ௪)

வருபிர பஞ்ச மறிதலி னானின் மலன்றனையு
மிருவினை யுற்ற வுயிரொப்ப னென்றிங் கிசைத்தனையேற்
கருதரு காரண சத்தாய்ப் பிரபஞ்சங் காண்டலினாற்
றருபிர பஞ்ச மதனாற் சுகமின்று தாணுவுக்கே. (எ௫)

ஊனுர் பிரபஞ்ச போக மாற்கின் றுயிர்க்குண்டென
ஆனுத காரியங் காசினி யென்று மகவறன்னே
ஞானு வமிர்தத்துட் சொல்லி யிருப்பது நாடிலேயோ
மானுர் கானுக்குத் தோடமுண் டென்பது வார்த்தையின்றே. (௭௬)

சின்மயன் போல்முத்தர் பார்ப்ப ருலகின்பஞ் சேர்வதில்லைப்
பன்னிய விட்டப் பிராத்தி பிரபஞ்சம் பார்ப்பதுவே
யின்ன வகையன்றி வேறு சுகமிங் கியம்புவதென்
சொன்ன வகைகளில் யாவு மிலேயென்று சொல்லிடிலே. (௭௭)

முத்தியி லின்பமுண் டென்றே மொழிந்தனர் மூதறிவோர்
சித்தி யடைந்த வியோகரு மின்பஞ் செறிந்தனரால்
நித்திய மாகிய வின்பமின் றென்ன நிகழ்த்துவதெ
னித்தன்மை கேவல மெய்தினர் தங்க ளியல்பதுவே. (௭௮)

கேவல ஞானங் கிளக்கு மியோகிகள் கேடில்பர
மாவலன் சந்நிதி முன்ன ரனைத்தும் வயங்குநிலை
தாவல வென்றே யுதித்தவை யெண்ணிச் சதிருரைத்தா
ரேவல னெம்மிறை ஞானத் தியல்தா னியம்பரிதே. (௭௯)

கரணம் பொறியுடல் யாவுஞ் செலுத்தக் கலக்கமிலாத்
தருண வுயிரெனத் தாணுவு மிவ்வுயிர் தம்மையெலா
மருண வுதயத் தமைத்தவை நோக்கி யருமறைக
ளிரண மொழிசொல விவ்வண மெண்ணின ரேழைகளே. (௮0)

சிற்றறி வின்றிச் சிறுபோகந் துய்த்திடல் சீரிதன்று
முற்றறி வின்றி முனைவன் கழற்சேர முற்றுவதோ
பெற்றுென் றுயர்த்தான் பிறவிப் பெருந்துயர் பிற்பட்டிட
முற்றும் பரபோகந் துய்ப்பித் திடுதலே முன்னுகவே. (௮௧)

அருளுரு வாகிய வன்பன் கருணேக் கருவுருவன்
மருளினே வாட்டிட வாண்மழு வேந்தி மலமொழித்துக்
கருளினைத் தேய்த்துக் கழலடி வைக்குங் கருவதுவாந்
தெருளினே யான்ற சுகானந்த மென்பராற் சீரிதென்றே. (௮௨)

ஆருயிர்க் குள்ள சுகானந்தந் தன்னைநல் லாகமங்கள்
சீருடைத் தாகுஞ் சிவத்துவ மென்றிவண் செப்பியதே
பேருயி ருந்தன தாயுறு மானந்தம் பெற்றிருக்க
நீருரை செய்த சிவானந்த மன்றென நீசொலினே. (௮௩)

இன்புரு வான சருக்கரை நாடி யினிதிசைந்தோர்க்
கின்பது நல்கிப்பின் றூனருந் தாத வியல்பதுபோற்
றுன்பறு முத்தரு மன்னியர்க் கின்பந் தொகுப்பதல்லாற்
றுன்பறு மின்ப சுகப்பே றிலரெனச் சொல்லுகவே. (அச)

அன்னியர் வந்து சருக்கரை தன்னை யருந்துதல்போ
லுன்னுயி ரானந்தந் தன்னை யருந்து மொருவர்க்குண்டோ
மன்ன வனுமுயிர் தானுஞ் சுகவடி வாயுரைத்தாய்
நின்னது வாமின்பந் துய்ப்பா ரெவர்கள் நிகழ்த்துவையே. (அரு)

சருக்கரை தான்சடந் தானருந் துந்தன்மை தானுமின்றாம்
முருக்கிதழ் வாயரு மாடவர் தாமும் முயங்கவந்த
பெருக்கமி லின்ப மவர்தம தாகின்ற பெற்றியைப்போ
லிருக்கிசை முத்தர்தம் மானந்தந் துய்ப்ப ரெனச்சொலினே. (அசு)

ஆடவ ரானந்தந் தன்னை விளக்கிய வாயிழைக்கே
கூடிய வாடவ ரேசுக மாக்குங் குறிப்பதுபோ
னீடிறை முத்தர்தம் மானந்த நல்க நிகழ்முத்தருந்
தேடர னானந்த நல்குவ ரென்றினிச் செப்புகவே. (அஎ)

சருக்கரை தன்னை யடைந்தார் தமக்குத் தருஞ்சுகந்தான்
செருக்கும் விடய குணமோ வுயிர்தனிற் சேர்குணமோ
வருக்கும் விடய குணமெனில் மாதரு மாடவரும்
பெருக்குஞ் சுகமும் விடய குணமெனப் பேசுகவே. (அஅ)

சருக்கரை யற்ற பொழுதிற் சுகமனுந் தன்மையைப்போ
லுருத்தனை யற்ற விடத்தா டவருட னெண்டொடியுங்
குருத்தெழு மின்பம் பொருந்தா திருந்திடுங் கொள்கையினு
னருக்குபுன் போகம் விடய குணமென் றறைகுவரே. (அகூ)

அணுப்பால் விளங்கின்பம் யாவு மதன்குண மாமதனல்
மணிற்சா ருடனுஞ் சருக்கரை தானும் வருவிக்குமென்
றெணிற்சார் துயர்விட யக்குண மோவுயி ரின்குணமோ
கணிப்பாம் விடய குணமென நீயுங் கருதிடிலே. (கூ௦)

மயக்காம் விடய மதனாற் சுகதுக்கம் வாய்த்திருக்க
வுயிர்ப்பாற் சுகத்தை யுயிர்க்குண மென்ற வுரைதவறாந்
துயர்ப்பாலு மான்ம குணமே லணுக்குணந் தோன்றல்முத்தி
நயப்பான முத்தர்க்கு முண்டாஞ் சுகதுக்க நன்றதன்றே. (கூக)

முத்தரு மின்பதுன் பஞ்சேர்வ ரென்று மொழிந்திடவே
பெத்தரு முத்தரும் பேதமின் றாமே பிறைமவுலி
மத்த னிசைத்த வசனத் திதுவும் வருவதுண்டோ
இத்தன்மை செப்பினர் யாவரு மில்லை யிதுபழுதே. (௯௨)

தருதுக்க மின்ப முயிர்க்குண மோவிறை தன்குணமோ
மிகையற் றிரண்டும் விடய குணத்தெண் விடயகுணம்
தகவுற் றவர்க்குப் பொருந்துதல் போலரன் றாள்பொருந்த
மிகையற் றரனின்ப மேவு முயிர்க்கின்பம் வேறிலையே. (௯௩)

நித்தனுக் காருயிர் முத்தியி லொப்பு நிகழ்த்தலினா
லத்தனைப் போல வுயிர்க்கு வடிவமு மானந்தமென்
றுத்தம மான சிவாகமந் தானு முரைத்ததுவாம்
முத்தன் சிவானந்த மெய்தா னெனவு மொழிந்திடிலே. (௯௪)

முத்தன் சிவானந்தந் தன்னை யருந்தி முதல்வனையு
நித்தம் பிரிவில னென்று கமங்க ணிகழ்த்தலினால்
அத்தன தானந்த மெய்தா துயிரென் றறைந்தசொற்றா
னுத்தம முத்தி யுணரா தவர்க ளுரைக்குஞ்சொலே. (௯௫)

சிவனுக் குயிர்சம மென்றால் வடிவுஞ் சிவன்றனைப்போ
லிவனுக் குரைப்ப திசையா மலமறைப் பின்மைமுக்க
ணவனுக்கொப் பாமன்றி முற்று முவமை யறையினுயிர்
பவனுக்கு வேறன் றொருபொரு ளென்று பகர்ந்திடுமே. (௯௬)

வனையுங் கழலரன் பாதத்தெச் சீவன் வயங்குமெனிற்
புனையுந் தவஞ்சே ருயிர்க்கே சுதந்தரம் போற்றலுறு
மினையுந் தருமத் துயிர்கெட் டிறையடி யேயுமெனி
னனையு மலர்க்கொன்றை நம்பனைக் கூடும் நயமிலையே. (௯௭)

பாருறு நீருமந் நீருங் கலத்தலைப் பார்ப்பதுபோ
லோரு மரன்கழற் கூடு முயிரென்ப ரோர்விலரா
வாருந் தொழுபதத் தீசனுஞ் சேர்ந்திடு மாருயிருந்
தேரும் பொருளொன்றிற் சார்ந்திடுஞ் செய்திறல் சித்திக்குமே. ()

இருளறு சீவன்முத் தர்சிவ மேகண் டிருப்பரென்றும்
அரனரு ளின்பந் தனதனு பூதிக மாமதென்றும்
பிரிவின்மெய்ஞ் ஞான முடையோர் சிவனைப் பெறுவரென்றும்
கரிசறு முத்தர் சிவன்றேற்ற மொன்றுங் கருதுவரே. (௯௯)

ஆறுப் பரம்பார்த் திருப்பர் பதார்த்தம்பா ரார்களென்றும்
கீறு விருண்மல நீங்க வரனடிக் கீழிருப்பார்
மாறுச் சிவானு பவமாவி யென்றும் வயிந்தவமோ
தேறுக் கலக்கமென் றுஞ்சித்தி நூலிடைத் தேர்ந்தனமே. (௲)

* சொன்னநற் சித்தியி னுண்மையை நீயுந் துணிந்தறிய
முன்னவ னுனந்தந் தன்னமு தார முயன்றருந்திப்
பின்ன மிலாம விருப்பரென் றுகமம் பேசியதா
லன்னியம் விட்டுச் சிவாநந்த முத்தியென் றேயறையே. (௲A)

பன்னு முயிரின் குணமாக வின்பம் பகர்தலின்றி
யுன்னுஞ் சிவன்றன தானந்த முத்த ருவந்தருந்திப்
பின்னமில் லாம விருப்பரென் றுகமம் பேசுதலா
லன்னியம் விட்டுச் சிவானந்த மேமுத்தி யாமெனுமே. (௲க)

திருநாவுக்கரசுதேசிகர் திருவடி வாழ்க.

உ

திருத்தருமையாதீனப் பிரதியினும் திருப்பனந்தாள் காசிமடப் பிரதியினுங் காணப்படுவன வாகிய இச்செய்யுள்களை ஆங்காங்கு இயலும் வண்ணம் பொருத்திக்கொள்க. இனியுஞ்சில செய்யுள்கள் உள்ளனவாகப் பெரியார் கூறுதலின் கிடைத்தவுடன் அவையும் பிரசுரிக்கப்படும்.

பன்னு குருவின் வசனந் தினமுமுன் பார்த்திருந்தே
துன்னுமஞ் ஞான மதனைத் தினமுந் துணிக்கின்றதா
மன்னவன் சொன்ன வசனத்தை விட்டிங் கறிவரிதான்
மன்னு குருவின் வசனத்தை நாளு மறக்கரிதே. (கக)

முத்தியி லீசன் றுணைநீ * * * * * யின் முன்மொழிந்த
முத்திய தாவது பாசங்க ணீங்கி முழுதுணர்தல்
முத்த ரவர்க்கு மல * * * * * * * * * * * *
* * * * பொருள் யாஞ்சொல்வ தன்றி மொழிவதின்றே. (கஉ)

ஆணவ நீங்குவ தான்மா வினுக்கன் னியதலத்தே
நாணி நடப்பது வோவன்றி நாசத்தை நண்ணுவதோ
தாணுவின் சத்தி யிடத்தே தடைப்பட்ட தன்மையதோ
பேணியிம் மூன்றனுட் பெற்றதை யீதென்று பேசுகவே. (கங)

அன்னிய தேச மடையுமென் றூன்மல மம்மலமு
மன்னிய புற்கலன் றூனும் வியாபக மாறுமன்றே
யின்ன வகையின்றி நாசத்தை யெய்துமென் றேதுணியின்
முன்னவ னித்த மலமென் றுரைத்தது மோசமன்றே. (கச)

நன்று வனைந்த கடத்துக்குப் பின்புற்ற நற்குயவன்
துன்று கடத்துக்குக் காரண மென்றிது சொல்லுவையேல்
இன்று பிறந்த கடத்துக்குப் பின்னு மிறையருளாற்
சென்றங் கடைந்த கரியையுங் காரணஞ் செப்புகவே. (ருஎ)

வந்தநல் யானை கடகா ரணமா வழங்குவையேன்
முந்திய காரணந் தானன வத்தை மொழியவருங்
கந்தடு மாவுங் குலாலனைப் போற்கட காரியத்தைத்
தந்திடும் யோக்கிய காரண மின்றெனச் சாதிப்பனே. (ருஅ)

காரண யோக்கிய முள்ள குலாலற் கடுப்பவிவண்
ஆரிரு ணீக்குத லெல்லாப் பொருளு மறிந்திடவே
பாரினிற் செய் * * * * * * * பகர்விளக்கின்
நீருரை செய்தநற் றேடமின் றென்று நிகழ்த்திடிலே. (ருகூ)

* * * * * * டும் யோக்கியம் போலறிவை
மாற்று மலத்தை யொழிக்குந் தகைமைக்கிவ் வான்கதிரு
மாற்றுங் குளிகையு மொப்பாம் பதிக்கென் றறைந்ததுபோற்
* * * * * * * * துண் டாயிற் றுணிந்தியம்பே. (கூ0)

ஆகம முத்தியி லீசர்க்கொப் பாமுயி ராமென்கையாற்
றேகமின் முத்தர்க்கு மீசன் குணங்களைச் செப்பியதா
மேகனுக் கொப்பு குளிகையு ஞாயிறு மென்றிசைத்த
பாகநன் முத்தர்க்கு மத்தன்மை சாற்றிய பண்பெனிலே. (கூக)

சந்திர னுக்கிணை யாமுக மென்னிலச் சந்திரன்றன்
சொந்த வொளியாம் வெளுப்பு முகத்திற் றுலங்கிடுமோ
தந்த முகத்தின் குணத்தி லதற்கொத்த தையறைவா
ரிந்த வுயிர்க்கிறை சொன்ன குணத்தி லியம்புகவே. (கூஉ)

ஆகமந் தானு மனுதின மானந்த மாஞ்சுகத்தை
* * * * * * * * விடுத்த பரமுத்தர்தாம்
தாகமுற் றென்றும் பொருந்துவ ரென்றிவண் சாற்றியதே
யூகம தாக வதனையும் பார்த்திங் குணர்ந்திலையே. (எகூ)

68090
R673

ஆனந்த * * * * * * * * * தாவதென்று
ஞானங்கொண் டெப்பொரு ளும்முணர் வேனென்று நன்றிசைத்தாய்
ஊனங் தவிருங் கிரியை தொழிலற் றுறையுமென்றே
* * * * * * * லுரைத் தாய்பொருள் மாறுபட்டே. (அ0)

அன்றியு மானந்த மென்பதை யாகமத் தாய்ந்தநல்லோர்
நன்றுள தாமென்ப வாசக மென்ன நவி * * * *
* * * * * * ணங்க ளிசைத்த திவணமென்றால்
உன்றனைப் போலத் தவறுரைப் பார்க ளொருவரின்றே. (அக)

சென்றிடுஞ் சித்திநன் னூலுயிர் தானுஞ் சிவானுபவ
மொன்றினுக் குப்புரித் தென்ற வுரையு முணர்ந்திலைகாண்
என்றுஞ் சிவத்துவந் தன்னைச் சிவானந்த மென்றிசைத்தால்
நன்றிசெய் முத்தி பெறலா மலங்க ணசித்திடவே. (அஉ)

அரனுவி ஞானங் கிரியையை மூடிய வாணவத்தின்
பரிபாகங் கண்டதை நீக்கிட ஞானம் பகர்கிரியை
விரிவாகு மென்னப் புகலாக மத்துயிர் மென்குணமாய்ப்
பிரிவரு மானந்தங் கூட விளங்குதல் பேசலின்றே. (கூஎ)

அண்ணலை யின்ப சொரூபியென் றாரண வாகமங்கள்
நண்ணி யுரைப்பது போலுயிர் தன்னை நவின்றதின்றால்
புண்ணிய முத்தருக் கின்பமுண் டென்று புகன்றதுமுக்
கண்ணன தின்பமென் றய்ந்தா கமத்துள்ளுங் கண்டுகொள்ளே. ()

(சித்தாந்த நிச்சயம் முற்றிற்று.)

உ

திருக்கைலாய பரம்பரை

ஸ்ரீகண்ட சந்தான சாம்பிரதாய அவிச்சின்ன ஞானபீடமாகிய

தருமபுர வாதீனத்து ஸ்ரீலஸ்ரீ

சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

எண்குணப் பெருமை.

சுவதந்திரத்துவம்.

உரியநல் லோர்தேத் தறிவதற் குளதா
முயரிய ஞானத்தைத் பொருத்தி
யரியதோர் சிவத்தி னொளியினைப் பெருக்கி
யான்றமுத் தாந்தராச் செய்வாய்

எண்குணப் பெருமை.

பெரியவிப் புவிக்கட் டன்வயத் தினனாய்ப்
பேசருஞ் செயலெலாம் புரியுந்
துரியமெய்ஞ் ஞானத் தருமையெம் பெருமா
சுப்பிர மணியசற் குருவே. (௧)

விசுத்ததேகம்.

கரிசறு சகச மலமது மருந்தாற்
கண்டனை யுறும்விட மென்ன
வுரியதன் சத்தி கெட்டுத்தான் கெடாம
லுள்ளவந் நிலையினைக் காட்டாய்
பருமிதத் தறிஞர் தூயநல் லுடம்பிற்
பருணித னெனவுரை பகருந்
துரிசறு ஞானத் தருமையெம் பெருமா
சுப்பிர மணியசற் குருவே. (௨)

நிராமயான்மா.

கருதிய முளையுந் தவிடுமி தாமுங்
கழன்றிட வரிசிகே டின்றிப்
பருதியின் வேறோர் நெல்லது தோன்றாப்
பண்பினை யுணர்த்தினை யெமக்குள்
வருதிவா காரணா யியற்கையி னுணர்ந்து
வான்மொழி மூர்த்திமா னாகுஞ்
சுருதிமெய்ஞ் ஞானத் தருமையெம் பெருமா
சுப்பிர மணியசற் குருவே. (௩)

சர்வஞ்ஞத்துவம்.

பெத்தமே முக்திப் பெருந்தசை யதுவே
பேசிடு மெவற்றினு நின்றே
யுத்தம வருளை யன்றியே யாங்க
ஞானாற்றுமெக் கருமமுங் காணேஞ்
சத்தர்த மாட்டுச் சருவமு முணர்த்திச்
சந்ததங் குருபர னாகுஞ்
சுத்தமெய்ஞ் ஞானத் தருமையெம் பெருமா
சுப்பிர மணியசற் குருவே (௪)

அநாதி போதம்.

சடமது வெனினுஞ் சித்தது வெனினுஞ்
சார்தரு மெவற்றினு நிறைந்து
திடமகத் துவங்கள் செறிதரக் காட்டிச்
சேர்நலம் பலவளித் தனையாற்

கடமயப் பாசப் பசுவியல் கடிந்து
காட்சிசால் போதமே நிலைப்பச்
சுடருமெய்ஞ் ஞானத் தருமையெம் பெருமா
சுப்பிர மணியசற் குருவே (ரு)

அலுப்த சக்தி.

சாற்றொடு தேன்பால் கனியமு தெல்லாங்
கலந்தவக் கலவையின் சுவையை
வேற்றறி யாத வண்ணமெம் முளத்து
விரவினை துரிசறுத் தருளிக்
காற்றிடை நுழையாக் ககனமே யருளின்
காட்சியே யனைத்துயிர்க் களித்துத்
தூற்றுமெய்ஞ் ஞானத் தருமையெம் பெருமா
சுப்பிர மணியசற் குருவே. (சு)

அனந்த சக்தி.

பாயநீர் கலந்த வுப்பது சுவையைப்
பாரித்த வாறுநின் குணங்கள்
நேயர்தம் மாட்டு நிகழ்தரக் கூட்டி
நின்மலா தீதத்தை யளிப்பாய்
வாயபூ தலத்தே வாய்ந்ததோர் சத்தி
வண்ணமெஞ் ஞான்றுமே வயங்குந்
தூயமெய்ஞ் ஞானத் தருமையெம் பெருமா
சுப்பிர மணியசற் குருவே. (எ)

திருப்தி.

வேதவா கமத்தும் விரியுநற் கலைகள்
விரித்தநன் னூலவை யகத்து
மோதுசித் தாந்த வுண்மையை யுணர்த்தி
யுயரிய குருவென வந்தாய்
ஏதமில் லாத வரம்பிலா வின்ப
மெங்களுக் கிசைபர ஞகுஞ்
சூதமெய்ஞ் ஞானத் தருமையெம் பெருமா
சுப்பிர மணியசற் குருவே. (அ)

எண்குணப்பெருமை முற்றிற்று.

10

குருபாதம் வாழ்க.